முருகப்பெருமான் துணை

**மகான் புதன்பகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.09.2022**, செவ்வாய்கிழமை

1. ஓங்கார குடில் படைத்த அரங்கா வாழ்க
ஓங்கார சூட்சுமமே தேசிகா வாழ்க
ஓங்காரன் அவதாரமாக வந்த குருராஜா வாழ்க
ஓதிடுவேன் புதபகவான் யானும்
2. யானுமே அருளாசி தன்னை
அரங்கனுக்கு சுபகிருது வேங்கை திங்கள்
ஞானமுள எழுநான்கு திகதி குசன்வாரம்
**(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 28 நாள், 13.09.2022 செவ்வாய்கிழமை)**
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்காண ஞானபண்டிதன் அருளை பெற
ஞானவான்களாக கலியுக மக்கள் மாற
பலம்வாய்ந்த அரங்கன் அன்னதானத்தையும்
பாதுகாப்பான அரங்கன் சன்மார்க்கத்தையும்
4. அய்யமற உலகோர் ஏற்றுவந்து
அரங்கனோடு சரணாகதி கொண்டு
மெய்ஞான தீட்சை ஏற்று
மேலான ஞானிகள் பூஜை செய்துவர
5. வருவதோடு அரங்கன் அன்னதானத்தில்
வழுவாது பொருள் உதவி செய்து
தர்மபலம் தனை பெருக்கிக் கொண்டு
தவராஜன் சீடர்கள் எனும் அடையாளத்தை
6. அடையாளத்தை உலகோர் பெற்றுவிட
அவரவர்க்கும் ஆற்றல் ஞானபலமாகி
தடையின்றி ஆறுமுகனார் அருட்தயவும்
தரணி காக்கின்ற வல்லமையும் வரமாகக் கிட்டும்
7. கிட்டவே ஞானவாழ்வு தரும்
குரு அரங்கனின் நயண தீட்சையும்
தட்டாது பெற்ற மக்களுக்கு
தவம் செய்த பலம் தானாய் எட்டும்
8. எட்டுமே பிறவி நோக்கம் தன்னை
இலகுவாய் அடையும் ஞானமும்
கிட்டுமே தனித்துவ வரமாக
கேட்கின்ற வரங்கள் அனைத்துமே
9. அனைத்துமே அரங்கன் ஆசிபெற்ற மக்களுக்கு
அடுக்கடுக்காய் சித்திகளாக மாறி
துணையாக குருவருளால் தேறி
தெரிவிப்பேன் கலியுகத்தில் வெற்றிகாணும்

10. காண்கவே இந்தவித அற்புதங்கள் எல்லாம்
கலியினில் அரங்கனால்தான் நடந்தேறும்
மேன்மை தரும் அரங்கன் சன்மார்க்கம்
முக்தி தரும் உயர்ஞான மார்க்கமாகும்

11. ஆகவே அரங்கனை தொடர்ந்துவர
அதிசயம் கலியினில் நடந்தேறும்
ஜெகமெங்கும் ஞானவான்கள் படைபெருகி
சித்திமிகு ஞான ஆட்சி மலரக்கூடும்

அருளாசி முற்றே

–சுபம்–